**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 64/2026 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்பிரமணியன் | க–பெ/ த–பெ | முத்துராமலிங்கம் |
| ஊர்: | : | மானகிரி | சமயம் | |
| வயது: | : | 48/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டிராவல்ஸ் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.09.2026**

-------------------------------------------------------------------------------------------------------

<u>01.09.2026</u>

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எதிரியின் தொலைபேசி எண் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் சி.கே. மகால் காரைக்குடி அருகே குடியிருந்தார் தற்போது KVS நகரில் வசித்து வருகிறார். எதிரி சாந்தி எங்கு பணி பார்க்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. சண்முகம் எனது உறவினர் ஆவார். சண்முகம் மூலமாகத்ததான் எதிரியை எனக்கு தெரியும். நான் வாகனம் வாங்குவதற்காக வங்கி கணக்கில் பணம் வைத்திருந்தேன், சண்முகம் சொன்னதால் எதிரிக்கு 2 சதவீதம் வட்டிக்காக ரூ.2,00,000/– பணம் கொடுத்தேன். எதிரியை தனிப்பட்ட முறையில் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சண்முகம் சார்பதிவாளர் அலுவலத்தில் டிரைவராக உள்ளார் என்றால் சரிதான். அவர் இது போல் பல நபர்களுக்கு என்னிடம் இருந்து பணம் பெற்றுக்கொடுப்பார் என்றால் சரியல்ல, எதிரிக்கு மட்டும் கொடுத்துள்ளார். ரூ.2,00,000/– எந்த வங்கியில் வைத்திருந்தேன் என்றால் எனது

ஸ்டேட் வங்கியில் வைத்திருந்தேன். எந்த தேதியில் பணம் வைத்திருந்தேன் என்றால் 16.03.2025 ற்கு முன்பு ரூ. 1,60,000/- வைத்திருந்தேன், மீதத்தொகையை ரொக்கமாக கொடுத்திருந்தேன்.

2) எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும், சண்முகத்திடம்தான் காசோலை கொடுத்தார் என்றாலும், சண்முகத்திடம் பணத்தை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் சரியல்ல. எத்தனை சதவீதம் வட்டிக்காக பணம் கொடுத்தேன் என்றால் 2 சதவீதம். வட்டி தொகை பெற்றேனா என்றால் இல்லை. ஏன் பெறவில்லை என்றால் எதிரி தருவதாக கூறினார் ஆனால் வட்டி தொகை தரவில்லை. எதிரி யார் என்றே எனக்கு தெரியாது என்றாலும், எதிரி எனக்கு காசோலை கொடுக்கவில்லை என்றாலும், சண்முகத்திடம் கொடுத்து வைத்திருந்த காசோலையை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவரை தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் தொலைபேசி எண் என் தொலைபேசியில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நேரடியாக எதிரியிடம் பணப்பரிவர்த்தனை வைத்துக்கொடுக்கவில்லை என்றாலும், சண்முகம் மூலமாகத்தான் பணம் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. பணம் நேரடியாக எதிரிக்கு என் மானகிரியில் உள்ள வீட்டில் வைத்துக்கொடுத்தேன். உண்மையாக எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் ஆவணம் எழுதிப்பெற்றிருப்பேன் என்றால் புரோநோட் எழுதிக்கொடுத்தார். உண்மையாக எதிரி பணம் பெற்றிருந்தால் எதிரி G-Pay தொடர்பு இருந்திருக்கும் என்றால் சரியல்ல, G-pay மூலம் தொடர்பு இல்லை. எதிரி சண்முக நாதனிடம்தான் பணம் பெற்றார்ள ன்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சண்முகநாதனிடம் ரூ. 50,000/- கடனாகப்பெற்றார் என்றும் அதை G-pay

மூலம் செலுத்திவிட்டதாக ம.சா.ஆ.6 பதில் அறிவிப்பில் எதிரி குறிப்பிட்டு உள்ளார் என்றால் சரிதான், அவர்களுக்கு இடையே உள்ள பரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியாது. சண்முகம் மூலமாகத்தான் எதிரியை எனக்கு தெரியும் என்று எனது அறிவிப்பு ம.சா.ஆ–4 ல் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். சண்முகத்தை விசாரித்தால் வழக்கு பரிவர்த்தனை பற்றி தெரியவரும் என்றால் சரிதான். நான் சண்முக நாதனிடம் இருந்து காசோலையை பெற்று எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்க்ல செய்துள்ளேன் என்றாலும், எதிரி என்னிடம் எந்த ஒரு கடனும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சண்முகநாதனுக்கு G–pay செய்ததை பற்றி என்ன கூறுகிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.09.01 16:36:23 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.